1987 மார்ச் 24]

அடுத்து காவிரி ஆற்றில் அவர்கள் நம்மைக் கேட்காமலேயே குறுக்கே அணைகளைக் கட்டுகிறார்கள் என்றால் அவர்கள் அவர்களுடைய சொந்தப் பணத்தில் அதைச் செய்கிறார்கள். பிளானில் சேராத திட்டம் என்ற அடிப்படையில் செலவு செய்கிறார்கள். எனவே நாம் மத்திய அரசிடம் சொன்னாலும் அது பிளானில் சேராதது, அதை நாங்கள் பிளானில் சேர்க்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் சொந்தப் பணத்தில் அவைகளை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அணைகள் கட்டும் பணியை விரைவு செய்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய பகுதியில் காவிரி மாடர்னைசேஷனை எடுத்துக்கொண்டால் ஏறத்தாழ 500 கோடி ரூபாய் தேவை. இவ்வளவு பெரிய நிதியை நம்முடைய மாநில பட்ஜெட்டிலிருந்து ஒதுக்க முடியாது. ஆகவே உலக வங்கியிடம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இப்போது மத்திய அரசாங்கத்திடம், "எங்களைப் பொறுத்த வரையில் தண்ணீரைப் பயன்படுத்தப் போகிறோம், சிக்கனமாக நடத்துவதற்கு கர்நாடக அரசின் ஒப்புதல் தேவையில்லை, மத்திய அரசாங்கம் உடனடியாக ஒத்துழைப்புத் தர வேண்டும்" என்ற கோரிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சரிடத்திலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடியாத்தம் தாலுகா கனவா மேட்டூர் கிராமத்தில் சிறிய நீர்த்தேக்கம்.

78—(*வினா எண் 9310) **திரு. ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலுகாவிலுள்ள கனவா மேட்டூர் கிராமத்தில் சிறிய நீர்த்தேக்கம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இத்திட்ட மதிப்பீடு தல அதிகாரிகளால் இறுதியாக்கப்பட்டு வருகிறது. பின்னர் சாத்தியக்கூறுகள் மற்றும் அவசியம் முதலானவற்றை ஆராய்ந்து அளிக்கப்படும் ஒப்புதலுக்குப்பின் பணி ஆரம்பிக்கப்படும்.

திரு. ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதியிலே கனவா மேட்டூர் என்கின்ற ஒரு சிறு நீர்த்தேக்கம் இருக்கிறது. எங்கள் பகுதியில் காவிரி போன்ற பெரிய ஆறு, பல்வேறு ஆறுகள் அங்கே ஓடுவதற்கு வாய்ப்பில்லை. எங்கள் பகுதி மேட்டுப் பகுதியாக இருப்பதாலும், இரண்டு மலைக்களுக்கிடையிலே அந்தப் பகுதி அமைந்திருப் பதாலும், அங்கே ஒரு சிறு நீர்த்தேக்கத்தைக் கட்டினால் அங்கே யுள்ள மேட்டுப் பகுதியில் வாழும் ஏழையெளிய விவசாயிகளுக்கு பெரும் உதவியாக இருக்கும்.

சேம்பளி, மோர்ஜனா என்று ஆறுகளின் மேல் ஒரு சிறு நீர்த் தேக்கம் கட்டித் தர வேண்டும் என்று அமைச்சரிடத்திலே நான் கோரிக்கையைக் கொடுத்திருக்கிறேன். இதே போன்று எங்கள் பகுதியில் உள்ள ஏரிகள் அத்தனையும் தூர்ந்துபோய் நிலமாக்கப் பட்டிருக்கின்றன. அதை தூர் எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சேதிக்கேரி, உம்மனாகுப்பம் போன்ற ஏரிகளில் எல்லாம் வீடுகள் கட்டப்பட்டு நிலமாக்கப்பட்டிருக்கின்றன. அதே போன்று ஆறுகள் எல்லாம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவற்றையெல்லாம் நீர்ப் பாசன மானியத்தின் மீது பேச வேண்டும். கேள்வியாகக் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் என்னிடம் நேராகவே சொல்லியிருக்கிறார்கள். அதன் மீது விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

கடனா நதி நீர்த்தேக்கத்திலிருந்து மாறன் குளத்திற்கு விடப்படும் தண்ணீர்.

79.—(* வினா எண் 9366) டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடனா நதி நீர்த்தேக்கத்திலிருந்து பாப்பாக்குடி ஒன்றியம், வடக்கு அரியநாயகிபுரத்தில் உள்ள மாறன் குளத்திற்கு விடப்படும் தண்ணீர் முழுமையும் சில தனியார்களுடைய உபயோகத்திலேயே இருந்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பொதுமக்களுக்குப் பலன் ஏற்படும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?